**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 62** **நாள்: 30.01.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்தில் டேன் டீ உணவகத்தினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று திறந்து வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்தில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள டேன் டீ உணவகத்தினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (30.01.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில், ராஜா முத்தையா சாலை பக்கம், 1700 ச.அ. பரப்பளவில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் சார்பில் உணவகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த உணவகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உணவருந்துவதற்கு ஏதுவாக வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., டேன் டீ மேலாண் இயக்குநர் திரு.அருண்லால், இ.வ.ப., பொது மேலாளர் திரு.தருண்குமார் இ.வ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**